# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2024 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் வினாத்தாளானது ஒன்பது கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.

## பகுதி A

இப்பகுதி ஒவ்வொன்றும் ஐந்து புள்ளிகளைக் கொண்ட நான்கு வினாக்களை உள்ளடக்கியிருந்தது.

### வினா இல. 01

இவ்வினாவின் பகுதி (a) ஆனது, தனியுடமை வியாபாரம் ஒன்றிற்கு பரிசீலிக்கத்தக்க வணிக நிறுவனங்களின் இரண்டு வகைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பகுதி (b) ஆனது பகுதி (a) இல் இனங்காணப்பட்ட நிறுவனங்கள் தொடர்பில், தரப்பட்ட சட்ட அம்சங்களை இனங்காண எதிர்பார்க்கப்பட்டது.

பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இரண்டு பகுதிகளுக்கும் விடையளித்திருந்தனர். அவர்கள் பகுதி (a) இற்கு பங்குடமை மற்றும் பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி என்பவற்றை விடைகளாக வழங்கி, முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எனினும், சில பரீட்சார்த்திகள் பகுதி (a) ஐச் சரியாக விளங்கிக்கொள்ளாது சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சிறப்பாக இருந்தது.**

### வினா இல. 02

இது ஒரு நேரடியான வினாவாகும். இங்கு இடர் முகாமைத்துவத்தைப் பயன்படுத்துவதன் நன்மைகள் மீது கவனம் செலுத்தப்பட்டது. வணிக இடர்களை இனங்காணுதலும் நிறுவனத்தினுள் அத்தகைய இடர்களைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தலும் என்பதே இதற்கான விடையாகும்.

கணிசமானளவு பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளித்திருந்தனர். எனினும், ஒரு சிலர் மாத்திரமே முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இது பிரதானமாக, வினாவில் கேட்கப்பட்ட இடர் முகாமைத்துவ நன்மைகளுக்குப் பதிலாக இடர் மதிப்பீட்டு நடைமுறைகளை பல பரீட்சார்த்திகள் விளக்கியிருந்ததே காரணமாக அமைந்திருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

**வினா இல. 03**

**(a)** இவ்வினா உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றில் தொடர்புபடும் மூன்று தரப்பினர் பற்றிப் பரீட்சித்திருந்தது. அதிகமான பரீட்சார்த்திகள் துல்லியமான விளக்கங்களை வழங்கியிருந்த போதிலும், ஒரு சிலர் நிதித் தகவல்களின் பயனர்களை தவறாக விளக்கியிருந்தனர்.

**(b)** இவ்வினா, ''நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்'' மற்றும் ''வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்'' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மீது கவனஞ் செலுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சிறந்த புரிதலை நிரூபித்திருந்ததுடன் உயர் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

**வினா இல. 04**

**(a)** நிறுவனமொன்று அதன் தரக் கட்டுப்பாட்டு முறைமையுடன் தொடர்புடைய ஒழுக்கநெறித் தேவைகளின் கீழ் பேணவேண்டிய சுயாதீனம் பற்றி விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டது.

சில பரீட்சார்த்திகள் அவர்களது விடைகளுக்கான குறித்த பாடப்பரப்பைச் சரியாக இனங்கண்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் அத்தியாயம் 8 இன் பிரிவு 8.3 இலுள்ள ஒழுக்கநெறித் தேவைகளில் விபரிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனம் பற்றி கவனஞ் செலுத்தி யிருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் தோற்றம் மற்றும் மனநிலை வேறுபாடுகள் பற்றி விவரித்திருந்தனர். ஒரு சிலர் அச்சுறுத்தல்கள் உருவாகும் விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் தொடர்புகள் பற்றிய விபரிப்புகளை உள்ளடக்கியிருந்தனர். சிலர் தரக் கட்டுப்பாட்டு முறைமையிலுள்ள ஆறு கூறுகள் பற்றியும் ஒழுக்கநெறிக் கோவையின் கோட்பாடுகள் பற்றியும் தேவையற்ற விதத்தில் விபரித்திருந்தனர்.

**(b)** இந்தப் பகுதியானது, தனித்தனியான கணக்காய்வு உறுதிப்படுத்தல் ஒன்றின் ''மீளாய்வு'' இன் கீழ் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைப் பட்டியலிட்டது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் இப்பகுதிக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் பெரும்பாலானவற்றைப் பெற்றுக் கொண்டனர். பலர் சான்று சேகரிப்பு தொடர்பான பொதுவான விடைகளை அளித்திருந்த அதே வேளை சிலர் கணக்காய்வுச் சான்று, நோக்கெல்லை, தொழில்சார் சந்தேகம் போன்ற கணக்காய்வுடன் தொடர்புடைய தொழினுட்பப் பதங்களைப் பட்டியலிட்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

இந்தப் பகுதி, ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கி யிருந்தது.

### வினா இல. 05

**(a)** ஒட்டுமொத்த கணக்காய்வுத் தந்திரோபாயத்தை நிறுவும்போது கணக்காய்வாளர் கருத்திற் கொள்ளக்கூடிய விடயங்களையும் தரப்பட்ட விவரணத்தில் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளையும் பரீட்சகர் பரீட்சித்திருந்தார்.

பெரும் எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர். இங்கு அவர்கள் நிருமாணத் தொழிலிலிருந்து இரத்தினக்கல் வணிகத்திற்கான கம்பனி மாற்றம் பற்றி அடிப்படையான மற்றும் பொதுவான விடயங்களை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், இரத்தினக்கற்களை மதிப்பிடுவதற்கு நிபுணர்களைப் பயன்படுத்துதல் மற்றும் இரத்தினக்கல் ஏற்றுமதி ஒழுங்குவிதிகள் மற்றும் உற்பத்தியின் தர நியமங்களுக்கு இணங்குவதை உறுதி செய்தல் போன்ற குறிப்பான பகுதிகளைத் தவறவிட்டிருந்தனர்.

**(b)** பரீட்சார்த்திகள், தரப்பட்ட விவரணத்தில் கவனஞ் செலுத்த வேண்டிய குறிப்பான பகுதிகளை இனங்காண்பதில் குறிப்பாக, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் தேவையான அறிக்கையிடல் மற்றும் துறை நிபுணர்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுடன் இணங்குவதில் சவால்களை எதிர்கொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 06

இவ்வினா மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இப்பகுதி ''மோசடி'' என்னும் பதத்தை பொருள் வரையறை செய்யுமாறு கேட்டிருந்தது. கிட்டத்தட்ட அனைத்து பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** நிதிக் கூற்றுக்களின் மோசடி தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பினை இப்பகுதி பரீட்சித்திருந்தது. ஒரு சிலர் மாத்திரமே இப்பகுதிக்கு நன்றாக விடையளித்திருந்தனர். அதே வேளை பெரும்பாலானவர்கள், கணக்காய்வாளர்கள் மேலதிக பணிகளைச் செய்து மோசடி பற்றி பணிப்பாளர்களுக்கு ஒரு தனியான அறிக்கையை வழங்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தனர். மோசடியைக் கண்டுபிடித்தல் மற்றும் அறிக்கையிடல் சூழலில் முகாமை மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் ஆகியோரின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அடிப்படை விளக்கம் போதியதாக இல்லை என்பதையே இது காட்டுகிறது.

**(c)** இங்கு, வினாவே விடைக்கான போதிய ஆதாரங்களை வழங்கியிருந்ததால் இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகள் கிடைக்கப்பெற்றிருந்தன. சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே மோசடியான நிதி அறிக்கையிடல் இடம்பெறும் குறிப்பான சூழ்நிலைகள் அல்லது நிகழ்வுகள் பற்றி விவரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிதமானதாக இருந்தது.**

**வினா இல. 07**

இவ்வினா, ஒரு புதிய ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்வது தொடர்பான குறித்த விவரணம் ஒன்றை முன்வைத்து, அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களை இனங்காணுமாறும் அத்தகைய அச்சுறுத்தல்களைத் தணிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழியுமாறும் கேட்டிருந்தது.

**(a)** இங்கு, வெளிவாரியான கணக்காய்வு ஈடுபடுத்தல்களை ஏற்றுக்கொள்ளும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதான அம்சங்களையும் தேவைப்பாடுகளையும் விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். இங்கு பிரதானமாக, விரிவான முறையில் இரண்டு அம்சங்களை விவரிக்குமாறு கேட்கப்பட்டதால் அவர்களில் பெரும்பாலானவர்கள் கணிசமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** & **(c)**

எவ்வாறாயினும், தணிப்பதற்கான தொடர்புடைய அச்சுறுத்தல்களைப் பரீட்சார்த்திகள் இனங்காணத் தவறியிருந்ததால் பகுதிகள் (b) மற்றும் (c) இற்கு பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கத் தவறியிருந்தனர். சிலர் சரியான அச்சுறுத்தல்களை இனங்கண்டிருந்த போதிலும், வேறு எதையோ விளக்கியிருந்தனர். துரதிஷ்டவசமாக, பகுதி (c) ஆனது பகுதி (b) இன் விடையில் தங்கியிருந்ததால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (c) இற்கு விடையளிப்பதற்கு இடர்பட்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமானதாக இருந்தது.**

## பகுதி C

இந்தப் பகுதியானது 25 புள்ளிகளுக்கான விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட இரண்டு கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.

**வினா இல. 08**

இவ்வினா உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளை பற்றிப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நடைமுறை அனுபவங்கள் மற்றும் பாடப்புத்தகங்களின் அறிவையும் குறிப்பாக சுய கற்றல் புத்தகத்தின் அறிவையும் கொண்டு விடையளித்து, இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளில் சராசரிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(a)** இவ்வினா, தரப்பட்ட விவரணத்தில் காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டின் குறிப்பிடத்தக்க குறைபாடுகளை இனங்கண்டு, பரிந்துரைகளை முன்மொழிய எதிர்பார்த்தது. பெரும்பாலும் அனைத்து பரீட்சார்த்திகளும் இப்பகுதிக்கு விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், விடைகள் வினாவிலேயே தரப்பட்டிருந்த போதிலும், மிகச் சிலர் இப்பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

**(b)** கொள்வனவு மற்றும் இருப்பு தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு நோக்கமான ''செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மை மற்றும் வினைத்திறன்'' இன் கருத்தை விபரிக்குமாறும் கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர் எனினும் பலர் குறிப்பிடத்தக்களவு புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். இது கொள்வனவு மற்றும் இருப்பு முறைமைச் செயன்முறையிலுள்ள பலவீனங்களைச் சரியாக இனங்காணத் தவறியதால் ஏற்பட்டதாகும். மேலும், பலர் வினாவின் இரண்டாம் பகுதிக்கான விடையையும் விபரிப்பதில் இடர்பட்டிருந்தனர். அதாவது, ''செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மை மற்றும் வினைத்திறன்'' பற்றிய போதிய விளக்கத்தை வழங்காது பெரும்பாலும் வெறும் சொல்லாடல்களை அல்லது தனியான பொருள் வரையறைகளை வழங்கியிருந்தனர்.

**(c)** இங்கு, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் உள்ளார்ந்த வரையறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு விடையளித்திருக்கவில்லை.

**(d)** இப்பகுதியானது விற்பனை முறைமையுடன் தொடர்புடைய பொது மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகளைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்கு விடையளித்திருந் துடன் உதாரணங்களை வழங்கி புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இருப்பினும் அவர்கள் IT கட்டுப்பாடுகள் பற்றிய வரையறுக்கப்பட்ட அறிவையே வெளிப்படுத்தியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 09**

இவ்வினா A, B என இரு பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி A**

இவ்வினா பகுப்பாய்வு மீளாய்வு நடைமுறைகள், தொடர்புடைய தரப்பு ஊடுசெயல்கள் மீது ஆற்றப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளின் பொருத்தப்பாட்டுத்தன்மை, தொடர்புடைய தரப்பு ஊடுசெயல்களை இனங்காண்பதற்கான பொறுப்பு ஆகியன பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அத்துடன் அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகளை மீளாய்வு செய்வதில் ஆற்றப்படக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை மதிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்ததுடன் பகுப்பாய்வு நடைமுறைகளை இனங்காண்பதற்கான முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், தொடர்புடைய தரப்பு ஊடுசெயல்களை அடையாளங் காண்பதற்கான பொறுப்பு தொடர்பான விளக்கமானது மோசமாக இருந்தது. பலர் இது முகாமையின் கடமை எனக் குறிப்பிட்டிருந்தனர். மேலும், தொடர்புடைய தரப்பு ஊடசெயல்கள் மீது ஆற்றப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளின்

பொருத்தப்பாட்டுத் தன்மையை மதிப்பிட்டது போதுமானதாக இல்லை. பெரும் எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடையை வழங்கத் தவறியிருந்தனர்.

அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகளின் மீளாய்வு என்பது ஒரு நேரடி வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி B**

பரீட்சார்த்திகளின் தீர்ப்பு பற்றிய அறிவை மதிப்பிடுவதற்கும் மூன்று வெவ்வேறு விவரணங்களில் அபிப்பிராயமொன்றை எவ்வாறு உருவாக்குவது என்பதற்கும் இது ஒரு சிறந்த வினாவாக இருந்தது.

விவரணம் A இன் கீழ், பெரும்பாலான பரீட்சார்த்திகள் அதன் பொருண்மை மற்றும் பரவலானதன்மை ஆகியவற்றின் காரணமாக அது ஒரு பாதகமான அபிப்பிராயமாக இருக்க வேண்டும் என்பதைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

விவரணம் B இன் கீழ், சில பரீட்சார்த்திகள் இது பொருள் ஆனால் பரவலாக இல்லை என்பதால் இது ஒரு தகைமைபெற்ற அபிப்பிராயமாக இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, நன்கு விடையளித்திருந்தனர்.

விவரணம் C இன் கீழ், அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இது ஒரு நோக்கெல்லை வரையறை என்று நம்பியதுடன், பாதகமான அபிப்பிராயம் ஒன்றை வழங்கவும் பரிந்துரைத்தனர். அதே வேளை மிகச் சிலர் தகைமைபெற்ற அபிப்பிராயம் வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தனர். விவரணங்கள் B மற்றும் C தொடர்பில், சில பரீட்சார்த்திகள் பொதுவாக மாற்றப்பட்ட அபிப்பிராய மொன்றைக் குறிப்பிட்டிருந்தனர், ஆனால் மாற்றப்பட்ட அபிப்பிராய வகையைக் குறிப்பிடவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை குறைந்த மட்டத்திலேயே இருந்தது.**

- - -

## தேர்வு நாடிகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்

1. பாடநூலை கவனமாக வாசித்து அதில் வழங்கப்பட்டுள்ள பகுதிகள் விளங்கிக் கொள்ள வேண்டும்
2. இப்பாடத்துடன் தொடர்புடைய நூல்கள் கையேடுகள் மடல்கள் நாட்குறிப்புகளை வாசிக்கவும்
3. செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதோடு அச்செயல் வினைச் சொற்களுக்கு அமைவாக கேள்விகளுக்கு விடை அளிக்க பயிற்சி செய்தல்
4. குறைந்தது கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கான கடந்த கால வினாக்களை பயிற்சி செய்வதோடு எவ்வாறு கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளல்
5. கேள்வியில் வழங்கப்பட்டுள்ள கருத்தியல்களையும் அவற்றின் பிரயோகங்களையும் புரிந்து கொள்ளல்
6. கடந்த கால வினாத்தாள்களில் பரிட்சிக்கப்பட்ட பாடநூலில் காணப்படும் பகுதிகளில் சிறு குறிப்புகளை எடுத்து அவற்றை தெளிவாக விளங்கிக் கொள்ளல்
7. கடந்த கால வினாத்தாள்களை நேரத் திட்டமிடலுடன் விடை அளித்து பழகல்
8. பாடநூலில் காணப்படும் அத்தியாயங்களுக்கு சிறு குறிப்பு எடுத்து அவற்றை மனப்பாடம் செய்தல்
9. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுத பழகல்
10. கேள்விகளுக்கு விடை அளிக்க முன் அறிவுறுத்தல்களை தெளிவாக வாசித்தல்
11. சரியான மனநிலையில் பரீட்சை எழுதல்
12. புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் ஆன நேர ஒதுக்கீட்டை தீர்மானித்தல்
13. விடைத்தாள்களை கையளிக்கும் முன் எல்லா வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கப்பட்டுள்ளதா மேலும் இலக்கங்கள் சரியாக இடப்பட்டுள்ளது என இரு முறை பார்த்தல்.

- * * * -